





துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) சென்னை கலைவாணர் அரங்கத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில் சர்வதேச, ஆசிய மற்றும் தேசிய அளவிலான விளையாட்டு போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 819 வீரர், வீராங்கனைகளுக்கு 21.40 கோடி ரூபாய்க்கான உயரிய ஊக்கத்தொகை காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உடனிருந்தனர்.

### சர்வதேச மற்றும் தேசிய அளவில் பதக்கங்கள் வென்ற வீரர் – வீராங்கனையர்க்கு

# 4 ஆண்டுகளில் ரூ.150 கோடி ரூபாய் உயரிய ஊக்கத்தொகை! இந்தியாவில் தமிழ்நாடு தவிர, எந்த மாநிலமும் வழங்கியதில்லை!

## சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை,செப்.28-**

***சென்னை, கலைவாணர் அரங்கத்தில், சர்வதேச மற்றும் தேசிய அளவில் பதக்கங்களை வென்று தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்த 819 வீரர் - வீராங்கனையருக்கு ரூ.21.40 கோடி மதிப்பிலான உயரிய ஊக்கத்தொகையை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி, வாழ்த்துரை வழங்கினார்.***

***நிகழ்ச்சியில், 2025 - வேர்ல்டு ஸ்பீடு ஸ்கேட்டிங் சாம்பியன் ஷிப்பில் பதக்கம் வென்ற ஆனந்த்குமாருக்கு ரூ.1.80 கோடியும், பிடே விமென்ஸ் கிராண்ட்ஸ்-2025 பட்டம் பெற்று - அரசு வேலையையும் பெற்ற கிராண்ட் மாஸ்டர் வைஷாலிக்கு ரூ.75 ஆயிரம் ஊக்கத்தொகையையும், மேலும், நால்வருக்கு கருணை அடிப்படையில் அரசு பணிக்கான நியமன ஆணைகளையும் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்திப் பேசினார்.***

***அப்போது அவர், "நம் அரசு அமைந்த இந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும், 4 ஆயிரத்து 510 விளையாட்டு வீரர்களுக்கு 150 கோடி ரூபாயை உயரிய ஊக்கத்தொகையாக நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இப்படி 4 வருடத்தில், இவ்வளவு விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையை எந்த மாநிலமும் வழங்கியதில்லை" என்று குறிப்பிட்டார்.***

***துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:-***

*4 ஆயிரத்து 510 விளையாட்டு வீரர்களுக்கு 150 கோடி ரூபாயை உயரிய ஊக்கத்தொகையாக நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். 4 வருடத்தில் எந்த மாநிலமும், இவ்வளவு விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையை கொடுக்கவில்லை.*

**819 வீரர்கள் 22 கோடி ரூபாய்**

*சர்வதேச மற்றும் தேசிய அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்று, தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ள 819 வீரர்களுக்கு, முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் 22 கோடி ரூபாய் மதிப்பிலான உயரிய ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். உங்கள் அனை வருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*



*நேற்று தொலைக்காட்சிகள், இன்று செய்தித்தாள்களில் பார்த்து இருப்பீர்கள். நேற்று அரசு சார்பாக, நம் நேரு உள் விளையாட்டு அரங்கில் 'கல்வியில் சிறந்த தமிழ்நாடு' என்ற மிகப்பெரிய நிகழ்ச்சியை முதலமைச்சர் அவர்கள் நடத்தி இருந்தார்கள். தெலங்கான மாநில முதலமைச்சர் மாண்புமிகு ரேவந்த் ரெட்டி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்கள்.*

*அரங்கம் முழுவதும் கல்வியாளர்கள், மாணவச் செல்வங்கள், கல்வியில் சாதித்த மாணவர்கள், முதலமைச்சரின் காலை உணவு, புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன் திட்டத்தில் பயன்பெற்ற மாணவர்கள் கலந்துகொண்டார்கள். அதில் நமக்கும் ஒரு சிறிய இடத்தை கொடுத்திருந்தார்கள். கல்வி என்றால், வெறும் பள்ளிக்கல்வி, உயர் கல்வி மட்டும் கிடையாது. அதற்கு சமமாக உடற்கல்வியும் மிக முக்கியம் என்று சொல்லும் அளவுக்கு, நம் விளையாட்டு வீரர்கள் சிலரை அங்கு வரவழைத்து, நம் முதலமைச்சர் அவர்கள் ஊக்குவித்திருந்தார்கள்.*

**விளையாட்டு வீரர்கள்**

*நேற்று, அந்த அரங்கம் முழுவதும் கல்வி கற்கின்ற மாணவர்களாக இருந்தார்கள். மிகவும் பெருமையாக இருந்தாலும், அரங்கம் முழுவதும் படித்து சாதித்தவர்களாக இருக்கிறார்கள் என்று சிறிது பொறாமையாக இருந்தது. ஆனால், இன்று இந்த அரங்கத்திற்கு வரும்போது மிகவும் பெருமையாக இருக்கிறது. இந்த அரங்கம் முழுவதும் விளையாட்டில் சாதித்து, பதக்கங்களை வென்றவர்கள் வந்து இருக்கிறீர்கள். இந்த அரங்கத்தில் நான்கு பேருக்கு கருணை அடிப்படையில், நம் துறையில் வேலைவாய்ப்புக்கான ஆணைகளை வழங்க இருக்கிறோம். அவர்களுக்கு எனது வாழ்த்துகள்.*

*விளையாட்டு வீரர்களைக் கொண்டாடுவதில் இன்றைக்கு இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலம் என்றால், அது நம் தமிழ்நாடு அரசுதான். அந்த அளவுக்கு நம் விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான, அனைத்து வசதிகள், உதவிகளை நம் முதலமைச்சர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். நம் அரசு அமைந்த இந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும், 4 ஆயிரத்து 510 விளையாட்டு வீரர்களுக்கு, 150 கோடி ரூபாயை உயரிய ஊக்கத்தொகையாக நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இப்படி 4 வருடத்தில், இவ்வளவு உயரிய ஊக்கத்தொகையை, விளையாட்டு வீரர்களுக்கு எந்த மாநிலமும் வழங்கியதில்லை.*

*இன்றைக்கு மட்டும் இவ்வளவு பேருக்கும் உயரிய ஊக்கத்தொகையைக் கொடுத்திருக்கிறோம் என்றால், அதற்கும் நம் முதலமைச்சர்தான் காரணம். சில மாதங்களுக்கு முன்பு நானும், நம் துறையின் செயலாளரும், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலரும் முதலமைச்சரிடம் சென்று ஒரு கோரிக்கை வைத்தோம். அதாவது எலைட் ஸ்கீம், எம்.ஐ.எம்.எஸ்., சி.டி.எஸ். திட்டங்களில் வருடந்தோறும் பயன் பெறுகிற வீரர்களின் எண்ணிக்கை கொஞ்சம் குறைவாக இருக்கிறது. எங்களுக்கு அதை அதிகபடுத்திக் கொடுக்க வேண்டும், திறமையான வீரர்களுக்கு உதவ வேண்டும் என்று முதலமைச்சரிடம் கோரிக்கையை வைத்தோம். உடனே, முதலமைச்சர் அவர்கள் அந்த எண்ணிக்கையை இரண்டு மடங்காக மாற்றிக் கொடுத்தார்கள்.*

**வீரர்களுக்கு அரசு வேலை**

*பொதுவாக போட்டியில் கலந்து கொண்டு, வெற்றிபெற்று வந்தபிறகு தான் அரசு பரிசுத்தொகையைக் கொடுக்கும். ஆனால், நம் முதலமைச்சரும், அரசும் மட்டும்தான் போட்டியில் கலந்துகொள்வதற்கு முன்பே, அந்த வீரர்களை அழைத்து நிதி உதவி செய்கிறது. நிதி உதவி மட்டுமல்ல, நீங்கள் வெற்றிபெற்றுவிட்டு வந்தீர்கள் என்றால், உங்களுக்கான அரசுவேலையையும் நம் அரசு கொடுத்துக்கொண்டு இருக்கிறது. தமிழ்நாட்டில் வரலாற்றிலேயே முதல்முறையாக, சென்ற வருடம் நூற்றுக்கும் அதிகமான வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அந்த வகையில், இன்று உங்களுக்கு உயரிய ஊக்கத்தொகையையும் கொடுத்திருக்கிறோம்.*

*நீங்கள் மீண்டும் வெற்றிப்பெற்று வரும்போது, நம் முதலமைச்சர் அவர்கள் அரசு வேலையையும் நிச்சயம் பெற்றுத் தருவார். இந்த அளவுக்கு தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து, நாம் உழைத்துக்கொண்டு இருக்கிறோம். நம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலமாக தேர்வுசெய்யப்பட்ட வீரர்கள் இந்த அரங்கம் முழுவதும் நிறைந்திருக்கிறீர்கள். அதில் ஒரு சில பெயர்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.*

**ஸ்பீடு ஸ்கேட்டிங் ஸ்டார்**

*இந்திய அளவில் மட்டுமல்ல, சர்வதேச அளவிலும் பல சாதனைகளைச் செய்துகொண்டு வருகிறீர்கள். அதற்குச் சிறந்த உதாரணமாக இந்த மேடையில், இருவரை அமர வைத்துள்ளோம். ஒருவர் இந்தியாவின், 'ஸ்பீடு ஸ்கேட்டிங் ஸ்டார்' என்று சொல்லப்படுகிற தம்பி ஆனந்தகுமார் வேல்குமார் இங்கு வந்துள்ளார். விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின், எம்.ஐ.எம்.எஸ். திட்ட வீரரான தம்பி ஆன்ந்தகுமார் சமீபத்தில், சைனாவில் நடந்த 2025 -வேர்ல்டு ஸ்பீடு ஸ்கேட்டிங் சாம்பியன் ஷிப்பில் கலந்துகொண்டு, இன்றைக்கு ஒட்டுமொத்த உலகத்தையும் தன் பக்கம் திரும்ப வைத்துள்ளார்.*

*இந்தப் போட்டியில் ஒரு பதக்கம் இல்லை, இரண்டு தங்கப் பதக்கம், ஒரு வெண்கல பதக்கம் என்று மொத்தம் மூன்று பதக்கங்களைப் பெற்றுள்ளார் தம்பி ஆனந்தகுமார் அவர்கள். இதன்மூலம் ஸ்பீடு ஸ்கேட்டிங் போட்டியில், இந்தியாவுக்காக தங்கப் பதக்கம் வென்ற முதல் வீரர் என்ற சாதனையை தம்பி ஆனந்தகுமார் அவர்கள் படைத்துள்ளார். நாம் அனைவரும் நம் வாழ்த்துகளைக் கைத்தட்டல்களில் மூலம் தெரிவித்துக் கொள்வோம். அவரின் வெற்றிப் பயணத்துக்கு நம் அரசும், நாம் அனைவரும் துணை நிற்போம்.*

*செஸ் கிராண்ட் மாஸ்டர் என்று போற்றப்படுகிற தங்கை வைஷாலி அவர்கள், சில நாட்களுக்கு முன்பு ஒட்டுமொத்த உலகத்தையும் திரும்பிப் பார்க்க வைத்து, மிகப்பெரிய சாதனையைப் படைத்துவிட்டு, இன்றைக்கு மிகவும் அமைதியாக, இந்த மேடையில் உட்கார்ந்து இருக்கிறார்கள். பிடே விமென்ஸ் கிராண்ட்ஸ்-2025-இல் வெற்றிப்பெற்று, அடுத்து 2025 ஆண்டிற்கான போட்டிக்கு இப்போது தயாராகி வருகிறார்கள். விமென் கிராண்ட் மாஸ்டர், இன்டர்நேஷனல் மாஸ்டர், பிடே கிராண்ட் மாஸ்டர்-2023 வெற்றியாளர், இப்படி இன்னும் ஏராளமான வெற்றிகளைப் பெற்றிருக்கிறார்கள். தங்கை வைஷாலி அவர்களுக்கு நம் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் கைத்தட்டல்கள் மூலம் தெரிவித்துக் கொள்வோம்.*

*வைஷாலி அவர்களுக்கு நம் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையின் மூலமாகத் தொடர்ந்து என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் செய்துகொண்டு வருகிறார்கள். அது மட்டுமல்ல, இரண்டு நாட்களுக்கு முன்பு விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித இடஒதுக்கீட்டின் அடிப்படையில், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் ஜூனியர் ஆபிசர் வேலைக்கான பணி ஆணையை, நம் முதலமைச்சர் அவர்களே அவர்களுக்கு வழங்கினார்கள்.*

**உங்களின் விடாமுயற்சி**

*ஆனந்தகுமாரும், வைஷாலியும் இங்கு உட்கார்ந்து இருக்கிற, விளையாட்டில் சாதிக்க நினைக்கிற உங்கள் அத்தனை இளைஞர்களுக்கும் ஒரு முன்னுதாரணமாக விளங்கிக் கொண்டு இருக்கிறார்கள். உங்களின் விடாமுயற்சியும், விளையாட்டுத் துறையின் ஆதரவும் சேர்ந்து இன்றைக்கு நல்ல பலன்களைக் கொடுத்திருக்கின்றன. இன்று பதக்கம் வாங்கிவிட்டோம் அத்துடன் போதும், என்று நாம் நின்றுவிடக்கூடாது. நீங்கள் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து பயிற்சி செய்ய வேண்டும். வெற்றி பெறுவதற்கு பொறுமை மிகமிக அவசியம். அதனால், பொறுமையையும், முயற்சியையும் கைவிடாமல் தொடர்ந்து பயிற்சி செய்யுங்கள். உங்களின் இலக்கில் மட்டும் நீங்கள் கவனமாக இருங்கள். இதை நான் விளையாட்டுத் துறை அமைச்சராக இல்லை, உங்களின் சகோதரனாக இந்த நேரத்தில் உரிமையோடு சொல்கிறேன்.*

*நீங்கள் உங்களின் இலக்கை அடைவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம் விளையாட்டுத்துறையும் என்றைக்கும் உங்களுக்கு உற்றத்துணையாக இருப்போம். உங்களின் முயற்சிகளை ஊக்கப்படுத்தத் தான் இந்த உயரிய ஊக்கத் தொகையை வழங்கி இருக்கிறோம். இதை பயன்படுத்தி, ஆடுகளத்தில் மட்டுமின்றி, உங்களின் வாழ்க்கையிலும் வெற்றிப்பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இங்கு வந்துள்ள அத்தனைபேருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, நம் தமிழ்நாட்டுக்கும், இந்திய ஒன்றியத்துக்கும் நீங்கள் பெருமை சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.*

*இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.*

### சென்னை – கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் ரூ.23.10 கோடியில்

# புவியியல் - சுரங்கத் துறையின் தலைமை அலுவலகக் கட்டிடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, செப். 28-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.9.2025) தலைமைச் செயலகத்தில், இயற்கை வளங்கள் துறையின் சார்பில் சென்னை, கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் 40,528 சதுர அடி கட்டடப் பரப்பளவில் 23.10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் தலைமை அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார்.**

தமிழ்நாட்டின் பல பகுதிகள் பல்வேறு கனிம வளங்களைக் கொண்டுள்ளன. இக்கனிம வளங்கள் மாநிலத்தின் விரைவான தொழில் மயமாக்கலுக்கு வழிவகை செய்கின்றன. கனிம வளத்துறையானது தொழில் வளர்ச்சிக்கேற்ப அதிகரித்து வரும் கனிமத் தேவைகளை பூர்த்தி செய்தும், தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்களுக்குக் கனிமங்கள் தொடர்ச்சியாகவும் சீராகவும் வழங்கப்படுவதை உறுதி செய்தும் வருகிறது.

புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் தலைமை அலுவலகமானது சென்னை, கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் தொடங்கப்பட்டு 50 ஆண்டுகளுக்கும் மேலாக பழமையான கட்டடத்தில் போதுமான இடவசதியின்றி இயங்கிவருகிறது. எனவே. இத்துறையின் பணியாளர்கள் மற்றும் நிர்வாக நலனை கருத்தில் கொண்டு, அதே இடத்தில் 40,528 சதுர அடி கட்டடப் பரப்பளவில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் 23.10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் தலைமை அலுவலகக் கட்டடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இவ்வலுவலகக் கட்டடத்தின் தரைத் தளத்தில் பார்வையாளர்களுக்கான அறை மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் ஓட்டுநர் ஓய்வறையும், முதல் தளத்தில் இயக்குநர் அறை, கூடுதல் இயக்குநர் அறைகள், இணை இயக்குநர் அறைகள் மற்றும் பார்வையாளர்களுக்கான அறைகளும், இரண்டாம் தளத்தில் துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், நேர்முக உதவியாளர் மற்றும் மேலாளர் அறைகளும், மூன்றாம் தளத்தில் கணக்குப் பிரிவு, தணிக்கைப் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு, சட்ட அதிகாரி அறை, அலுவலக கோப்புகளை பராமரிக்கும் இரண்டு காப்பக அறைகள் ஆகியவையும், நான்காவது தளத்தில் மாவட்ட அலுவலர்களுடன் ஆய்வு கூட்டரங்கு மற்றும் சுரங்க குத்தகை கோப்புகளை கையாளும் சுரங்கப் பிரிவு, ஆய்வுக்கூடம். நூலகம் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், குடிநீர் வசதி, மின்தூக்கி மற்றும் தீ தடுப்பு கருவிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) சுன்சோங்கம் ஜடக் சிரு, புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனை – திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமைச் செயலகத்தில் சந்தித்து தனது திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, காட்டூர் அதன் சுற்று வட்டாரத்தில், சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சாமானிய குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் அன்றாட சேமிப்பதற்காகவும், நகை கடன் உதவிகள் பெற்று வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவிகரமாகவும், அப்பகுதியில் கூட்டுறவுச் சங்கம் அமைக்க ஆவன செய்யுமாறு கோரிக்கை மனு அளித்தார்.